கோப்புச் நகல்

121

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), ஊராட்சி ஒன்றியம், துறையூர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திரு.அ.சுவாமிநாதன்,

ந.க. தி6/164/2021.

நாள்: 23.02.2021

பொருள் : மனைப்பிரிவு - துறையூர் ஊராட்சி ஒன்றியம் - துறையூர் வட்டம்- கண்ணனூர் ஊராட்சி, வடக்குவெளி கிராம சர்வே எண்கள் : 563/1Apt, 548/1A Pt - ல் கட்டுப்பட்ட 0.48 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ள தனித்த மனையினை வரன்முறை செய்து உத்தரவிடுதல் - தொடர்பாக.

பார்வை

1. திரு.பெ.தியாகராஜன், 1/251, பெருமாள் கோவில் தெரு, கண்ணனூர் துறையூர் என்பவரது விண்ணப்பம் நாள் : 13.01.2021 மற்றும் 25.01.2021.
2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருச்சிராப்பள்ளி அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண். 304/2018 தி.ம2 நாள்: 18.09.2018.
3. தானப்பத்திரம் எண்: 4978/2018. நாள்: 24.10.2018.

****************

**உத்தரவு :-**

துறையூர் ஊராட்சி ஒன்றியம், கண்ணனூர் ஊராட்சி, வடக்குவெளி கிராம சர்வே எண்கள் : 563/1Apt, 548/1A Pt - ல் கட்டுப்பட்ட 0.48 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவில் அமைந்துள்ள மனை எண்கள் : 1, 6, 10-ஐ வரன்முறை செய்து தர கோரி பார்வை 1-ல் காணும் விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது. பார்வை 2-ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதத்தில் ம.வ/ந.உ.இ (தி.ம) எண் 209/2018 என எண்ணிடப்பட்டு மேற்படி மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கி இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பார்வை 3-ல் காணும் தானப்பத்திரத்தில் மனைப்பிரிவு நிபந்தனையில் தெரிவித்துள்ளவாறு மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பூங்காவிற்கான இடம் துறையூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் தானப்பத்திரம் எண்: 4978/2018 நாள்: 24.10.2018-ன் படி கண்ணனூர் ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும் வரன்முறை செய்யப்படும் தனித்த மனைகளுக்கு கூராய்வு கட்டணம் ரூ. 1500/- உரிய அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. தற்போது அரசிற்கு செலுத்தப்பட வேண்டிய முறைப்படுத்துதல் கட்டணம் (517.45x45=23285) ரூ.23285/- சலான் எண்: 39 நாள்: 19.02.2021-ன்படி அரசு தலைப்பிலும், ஊராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய வளர்ச்சி கட்டணம் (517.45 x25=12940) ரூ.12940/- கண்ணனூர் ஊராட்சி திட்ட நிதி கணக்கு எண் : 1-ல் நாள்: 22.02.2021 ன்படி கண்ணனூர் ஊராட்சிக்கும் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரின் ம.வ/ந.ஊ.உ.இ.(தி.ம) எண்: 209/2018-ல் தெரிவித்துள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு மனை எண்கள் : 1, 6 மற்றும் 10- ஐ வரன்முறை செய்து இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

23/2/2021

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
ஊராட்சி ஒன்றியம், துறையூர்.

பெறுதல் :-

திரு.பெ.தியாகராஜன்,
1/251, பெருமாள் கோவில் தெரு,
கண்ணனூர்,
துறையூர்.

23/2/2021

\\T6\e\T6 New\Principal Proceedings.docx

# நகர் ஊரமைப்புத் துறை , உதவி இயக்குநர், திருச்சிராப்பள்ளி மண்டலம், திருச்சிராப்பள்ளி அவர்களின் நடவடிக்கைகள்

## முன்னிலை : திரு .ரா.நாகேஸ்வரன்,பி.இ,

ந.க.எண். 304 /2018 திம 2 நாள் 18.09.2018

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவுகள், மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017– 0.48 ஏக்கர் (20,949 ச.அடி )பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல்– தொடர்பாக.

பார்வை
1. அரசாணை எண்.78 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ந.வ 4(3) நாள் 4.5.2017.
2. அரசாணை எண்.172 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ந.வ 4(3) நாள் 13.10.2017.
3. அரசாணை எண்.55, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ந.வ 4(3) நாள் 02.05.2018.
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண் .13193/2017/LA2 நாள் 30.10.2017 மற்றும் நாள் 07.11.2017.
5. மனுதாரர் திரு.P.தியாகராஜன் என்பவரின் இணையதள விண்ணப்பம் மற்றும் இணைப்புகள் நாள்: 24.01.2018.

-------

பார்வை 1, 2 மற்றும் 3–ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை 4–ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின் படியும் பார்வை 5–ல் கண்ட மனுதாரின் கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், துறையூர் ஊராட்சி ஒன்றியம், வடக்குவெளி கிராமம், ச.எண்கள் . **563/1A** பகுதி –ல் கட்டுபட்ட 0.48 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தி இம்மனைப்பிரிவிற்கு **ம.வ(வ)/ந.ஊ.உ.இ(திம) எண். 529/2018** என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் (In Principle Approval) வழங்கப்படுகிறது.

மனைப்பிரிவின் பரப்பளவு – 0.48 ஏக்கர் (20,949 ச.அடி)

விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை – 06 எண்ணம்

(மனை எண்கள்: 2-5,8,9)

விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை – 04 எண்ணம்

(மனை எண்கள்: 1,6,7,10)

விற்கப்படாத மனைகளின் மொத்தப்பரப்பு – 8,470 ச.அடி

திறவெளி ஒதுக்கீடு (OSR)இடத்தின் பரப்பு– 870 ச.அடி (10.27 %)

ஒதுக்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை – 10 எண்ணம்

(மனை எண்கள்: 1-10)

செலுத்தப்படவேண்டிய கட்டண விபரம்:

**1).பரிசீலணைக்கட்டணம் :**

| | |
|---|---|
| இணையதளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500 வீதம் பரிசீலணைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விபரம் | 1,6,10 |

பரிசீலனைக் கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை இணைய தளம் மூலம் செலுத்த வேண்டும்.

**2). வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம்:**

| மனை எண்கள்: | வரன்முறைப்படுத்தும் கட்டணம் ஒரு சதுர மீட்டருக்கு 30 ரூபாய் வீதம் வசூலிக்கப்பட வேண்டும் | வளர்ச்சிக் கட்டணம் ஒரு சதுர மீட்டருக்கு 25 ரூபாய் வீதம் வசூலிக்கப்பட வேண்டும் |
|---|---|---|
| 1-10 | | |

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணையதளம் வாயிலாகவும் அல்லது கீழ்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

அ) வரன்முறைப்படுத்துதல் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு:

| | |
|---|---|
| 0217 Urban Development – 60 Other Urban Development Schemes- 800 Other receipts AT Receipt under Regularisation Charges of Unapproved layout and Plots-DTCP (DPC:0217 60 800 AT 0007) | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம் |

ஆ). வளர்ச்சிக்கட்டணம் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம்.

மேற்காண் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்மந்தபட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப் பட வேண்டும். விற்கப்படாத மனைகளை பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்மந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக்கொள்ளலாம்.

பார்வை 1 மற்றும் 2–இல் கண்ட அரசாணைகளின்படி மேற்காண் கட்டனம் தவிர வேறுகட்டணம் ஏதும் உள்ளாட்சியால் வசூலித்தல் கூடாது.

**நிபந்தனைகள்:**

1. அரசாணை எண்.172 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ந.வ 4(3) நாள் 13.10.2017 –ல் விதி எண்.7 (g) (ii)–ன் படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு

சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்மந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியபட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்
திருச்சிராப்பள்ளி மண்டலம்.

- இணைப்பு
  மனைப்பிரிவு வரைபடம் : 2 நகல்கள்

<u>பெறுநர்</u>
வட்டார வளர்ச்சி அலுவலர்,
துறையூர் ஊராட்சி ஒன்றியம்,
துறையூர் .

<u>நகல்</u>

1. திரு.P.தியாகராஜன்,
   1/25, பெருமாள் கோவில் தெரு,
   கண்ணனூர் கிராமம்,
   துறையூர் வட்டம்,
   திருச்சி மாவட்டம் –621 206,

2.தொழில்நுட்ப வைப்பறை–1.

3. உதவி இயக்குநர்( நில அளவை)
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருச்சி.

சாலை மற்றும் OSR பகுதியினை உட்பிரிவு செய்து உள்ளாட்சி பெயரில் மாற்றம் செய்யும் பொருட்டு

4.சார்பதிவாளர்
துறையூர் சார்பதிவகம்
துறையூர்.

சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சி பெயரில் பதிவு செய்யும் பொருட்டு.